**OPEN ACCESS**

Manuscript ID: TAM-060420224713

Volume: 6

Issue: 4

Month: April

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 15.01.2022

Accepted: 25.02.2022

Published: 01.04.2022

Citation:
Jeba Malar, R. "Humanism in Purananuru." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 4, 2022, pp. 37–40.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i4.4713

*Corresponding Author:
jebamalarhezio2018@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Humanism in Purananuru

**Dr. R. Jeba Malar**
*Assistant Professor, St. John's College of Arts and Science*
*Ammandivilai, Kanyakumari Dist., Tamil Nadu, India*
*https://orcid.org/0000-0002-3663-8378*

**Abstract -** Humanity is nothing but treating human as humankind and showing love towards them regardless of their age and racistic nature. The expression of love and humaneness differs according to the situation. The prominent reason for the emergence of the theory of humanity is in order to know the essence of human life and to prevent the hindrance that is making the mankind not to relish the true essence of humaneness. One should know that people around them are also human being who has the same feelings, emotions, rights and respecting all of those is also the definition of humanity. Treating and showing love towards people regardless of their caste, religion and language defines humanity. This research article explores the essence of humanity in the so called resistance literature.

**Key Words:** Sangam Literature, Purananuru, Humanity, Biological Thinking, Hospitality and Charity.

**References**

1. Purananuru Moolamum Urayum, E. 2010, Sharda Publishing House, Chennai.

# புறநானூற்றில் மனிதநேயம்

*முனைவர் இரா. ஜெபமலர்*
தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் துணை முதல்வர்
புனித ஜாண்ஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அம்மாண்டிவிளை

***ஆய்வுச் சுருக்கம்:*** *மனிதனை மனிதனாக மதித்து அன்பு காட்டுவதே மனிதநேயமாகும். இந்நேயமானது வயது மற்றும் இன வேறுபாடின்றி, அனைவர் மனதிலும் தோன்றக்கூடியதாகும். அவை வெளிப்படும் விதம் சூழ்நிலைக்கேற்ப மாறுபடுகின்றன. மனித வாழ்வின் பண்புகளை உணரவும் அதன் இன்பங்களை நுகரவும் முடியாமல் தடுக்கப்பட்டு இழிவுக்கும், பழிக்கும் ஆளாக்கப்பட்டுக் கிடந்த மனிதனை மீட்டெடுக்கவும் மாண்புறச் செய்யவும் வந்த உயரிய கோட்பாடே மனிதநேயமாகும். தன்னைச் சுற்றி இருப்பவர்களும் மனிதர்கள்தான். அவர்களுக்கும் உணர்வுகளும் உரிமைகளும் உண்டு என்பதை உணர்ந்து மதித்து வாழ்வதே மனிதநேயமாகும். சாதி, மதம், மொழி இவற்றின் பெயரால் மனிதனை ஒதுக்காமல் அன்பு காட்டி, உடன் உறை மக்கட்கு உற்றுழி உதவி பசிப்பிணி நீக்கி வறுமையிலிருந்து காப்பாற்றுவதே மனிதநேயமாகும். புறநானூற்றில் மனிதநேயப் பண்புகள் உள்ளன என்பதை இக்கட்டுரை விளக்குகின்றது.*

***முக்கியச் சொற்கள்:*** *சங்க இலக்கியம், புறநானூறு, மனிதநேயம், உயிரியல் சிந்தனை, விருந்தோம்பல், தொண்டு*

### மனிதநேயம்

மனித மனமானது மென்மையானது; அன்பிற்காக ஏங்கக்கூடியது; பயனை எதிர்பாராதது அன்பினைப் பெறும்போது மகிழ்கின்றது. மனித இனத்தின் இன்ப துன்பங்களில் பங்குகொள்ளும் உயரிய மனவுணர்வே மனிதநேயமாகும். உயிரின ஒருமைப்பாட்டிற்கும், மனித இன வளர்ச்சிக்கும், சமுதாய மேம்பாட்டிற்கும் மனிதநேயப் பண்பே அடித்தளமாக அமைகின்றது. விருப்பு வெறுப்புக்களைத் மனதில் வைத்திருந்தாலும் பிறர் ஒருவர் துன்பப்படும்போது உடுக்கை இழந்தவன் கைபோல ஓடோடிச் சென்று உதவிக்கரம் நீட்ட முன்வருபவனே மனிதநேய மிக்கவர். இன்றைய அறிவியல் வளர்ச்சியினால் மனித மனமானது பிறரை மதிக்காமல் அன்பு செலுத்தாமல் அலைபேசியே வாழ்க்கை என வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதனால் அன்பு, பாசம், நேயம் ஈகைக்குணம் இல்லாமல் வாழ்க்கையை இழந்து கொலை, பாலியல் வன்புணர்வு, மணமுறிவு போன்றவற்றால் நீதிமன்ற வாசலில் காவல் இருக்கின்ற மக்களின் எண்ணிக்கை அதிகரித்துகொண்டே இருக்கின்றது. அனைத்து மனிதரின் மன ஓரத்திலும் மனிதநேயம் என்ற பண்பு இருந்து கொண்டேதான் இருக்கின்றது. இடத்திற்கு இடம் காலத்திற்குக் காலம் மாறுபடுகின்றது. மனிதநேயத்தை வளர்ப்பதும் தக்க வைத்துக்கொள்வதும் இன்று கிராம மக்களிடையே அதிகம் காணப்படுகிறது.

### வாழ்வியல் சிந்தனை

மனிதனின் வாழ்வும் தாழ்வும் நிலத்தைப் பொறுத்து அமைவது இல்லை. அந்த நிலத்தில் வாழக்கூடிய மக்களைக்கொண்டு அமைகின்றது. மனிதனை மனிதனாக மதித்து மனிதநேயம் மிக்கவனாக வாழ்கின்ற நிலம் நன்மை பயக்கும் என்று சங்ககாலப் புலவர்கள் அனைத்து காலத்திற்கும் பொருந்துமாறு பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். மனிதன்

இவ்வுலகில் பொறுப்பு மிகுந்தவனாக இருக்கவேண்டுமென்பதை

***"நாடா கொன்றோ காடா கொன்றோ***
***அவலா கொன்றோ மிசையா கொன்றோ***
***எவ்வழி நல்லவர் ஆடவர்***
***அவ்வழி நல்லை வாழிய நிலனே"***
***(புறம்-187)***

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன.

**செல்வத்தின் பயனே ஈதல்**

தான் பெற்ற செல்வத்தைத் தான் மட்டும் அனுபவிக்காமல் இல்லாதவர்க்கும், இயலாதவர்க்கும் பகிர்ந்து கொடுக்கும் மனபக்குவம் உடையவனாக இருக்க வேண்டும் என்பதை,

***"உண்பது நாழி உடுப்பவை இரண்டே***
***பிறவும் எல்லாம் ஓர்ஒக்கும்மே***
***செல்வத்துப் பயனே ஈதல்"***
***(புறம் - 189)***

என்ற பாடல் வரிகள் மூலம் நக்கீரர் விளக்குகின்றார். "பகிர்ந்துண்டால் பசியாறும்" என்ற பழமொழிக்கேற்ப ஈகைப்பண்பில் தலைசிறந்தவர்கள் தமிழர்கள். தன்னை நாடி வருபவர்கள் உணவின்றி வாடிவிடக்கூடாது என்பதற்காகவும், பசிப்பிணியைப் போக்குவதற்காகவும் உணவுச்சாலைகளை அமைத்தனர் என்பதனை,

***"பசிப்பிணி மருத்துவன் இல்லம்***
***அணித்தோ சேய்ந்தோ?"***
***"பைதற் சுற்றத்துப் பசிப்பகையாகிக்***
***கோழியோனே கோப் பெருஞ்சோழன்***

என்ற வரிகள் விளக்குகின்றன.

**நண்பரின் நேயம்**

கடையெழு வள்ளல்களில் தலையானவரெனக் கருதப்படுபவர் பாரி வள்ளல். இயற்கை வளங்கள் நிரம்பப்பெற்ற பறம்பு மலையைச் சிறப்பாக ஆட்சி செய்து வருகின்றார். வீரத்தால் வெல்ல முடியாத பகைவர்கள் சூழ்ச்சியால் பாரியை வென்றனர். இவரது மறைவினால் நிலைகுலைந்த நண்பர் கபிலரோ பாரி இறந்த பின்னர் தமக்கென வாழாமல் பாரியின் மகளிர்க்குத் தந்தையாக நின்று தக்க இடத்தில் மணம் செய்து வைக்கின்றார்,

***"இவரியார் என்குவை யாயி னிவரே***
***ஊருடவிலவலர்க் கருளித் தேருடன்***
***முல்லைக் கீந்த செல்லா நல்லிசைப்***
***படுமணி யானைப் புறம்பிற் கோமான்***
***நெடுமாப் பாரி மகளிர் யானே***
***தந்தை தோழ னிவரென் மகளிர்***
***அந்தணன் புலவன் கொண்டு வந்தன்னே"***
***(புறம்-201)***

என்ற வரிகள் புறநானூற்றுக் கால அன்பு உண்மையானதாக இருந்தது என்ப விளக்குகின்றன.

பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழரின் நட்பு சிறப்பானது. இருவரும் நேரடியாகப் பார்த்ததில்லை. உறையூர் என்ற ஊரில் மன்னர் செல்வ செழிப்புடன் காணப்பட்டார். பிசிர் என்ற ஊரில் பிசிராந்தையார் வறுமையில் காணப்பட்டார். இத்தகைய வேறுபாட்டிலும் அன்பின் மிகுதியினால் இருவரும் நட்புடன் இருந்தனர். மன்னனோ உலக வாழ்வில் வெறுப்புற்று நாடு துறந்து உண்ணாநோன்பு இருந்தார்,

***"தென்னம் பொருப்பன் நன்னாட்டுள்ளும்***
***பிசிரோன் என்ப என் உயிர் ஓம்புனே"***
***(புறம் -215)***

பிசிராந்தையார் தம்மைக் காண வருவார் என்ற உறுதிப் பாட்டில் மனம் வருந்தி ஏக்கத்தில் உயிர் துறந்தார்.

இன்றைய காலச் சூழலில் நண்பனாக வலம் வருகின்றவர்களிடையே சிறிய பிரச்சினைகள் தோன்றும் போது தன்னோடு பயணித்த நண்பன் என்று பார்க்காமல் கொலை செய்கின்ற நிலைகள் அதிகரிப்பதால் இளம் தலைமுறையினருக்கு நட்பு, நேயம் என்பன புரியாமலே போகின்றன.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் என்பது புதிதாக வருகின்றவர்களுக்கு உணவளித்தல் ஆகும்.

அரசர்கள் தம்மை நாடி வருகின்ற விருந்தினர்க்கு உணவு அளிப்பதற்கு முன்னதாக அவர்களுடைய அழுக்கான ஆடையை அகற்றி, புதிய ஆடையை அணிய வைத்து வயிராற அறுசுவை உணவை வழங்கி உபசரித்தனர் என்பதை

**"நீல்நிறச் சிதாஅர் களைந்து**
**வெளியது உடீஇ என்பசி களைந்தோனே"**
***(புறம் 385)***

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன.

தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் என்பது தலைசிறந்த பண்பாகக் காணப்படுகின்றது. விருந்தினர்கள் அனிச்ச மலர் போன்றவர்கள். அவர்களை முகம் கோணாமல் வரவேற்கின்றனர் நிலையினை,

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து"**
***(புறம் - 90)***

விருந்தோம்பல் பண்பில் பாண்டியன் கிரஞ்சாத்தனைப் பற்றி ஆவூர் மூலங்கிழார் விளக்குகின்றனர்.

**"உண்ணார் ஆயினும் தன்னொடு சூளுற்று**
**உணம் என இரக்கும் பெரும் பெயர்ச்சாத்தல்"**
***(புறம் - 178)***

### ஈகை

மன்னர்கள் தன்னை நாடி வருகின்ற இரவலர்களுக்கும் புலவர்களுக்கும் வாரி வாரிப் பொருட்களை வழங்கினர். ஈகைப் பற்றிய செய்திகளையும் ஈகையினால் ஏற்படக்கூடிய பயன் என்ன என்பதையும் பற்றி ஔவையார் பாடல்கள் விளக்குகின்றன. அதியமானிடம் ஔவையார் பரிசில் வேண்டி பாடி செல்கின்றார். அப்போது அதியமானோ உடனடியாகப் பரிசு பொருட்களைக் கொடுக்காமல் காலம் தாழ்த்துகின்றார். ஔவையாரோ வருந்துகின்ற தன் நெஞ்சைப் பார்த்து நெஞ்சே வருந்தாதே எவ்வளவு காலம் தாழத் தித் தந்தாலும் அது பயனள்ளதாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு இருக்கின்ற நிலையில் அதியமான் கொடுத்த நெல்லிக்கனியை பார்த்த ஔவையின் மனதில் நீடுழி காலம் வாழுகின்ற சிவபெருமானின் நினைவுதான் வருகின்றது.

**"பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி**
**நீலமணி மிடற்று ஒருவன் போல**
**மன்னுக பெருக நீயே"** ***(புறம்-91)***

என வாழ்த்துகின்ற நிலை இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றது. ஈயென இரக்கின்றபோது இல்லை என்று கூறாது வாரி வழங்கியமையாலேயே புறநானுற்றில் ஈகைப் பற்றிப் பெருமையாகப் பேசப்படுகின்றது.

### தொகுப்புரை

இயற்கையோடு வாழந்த மனிதன் தன்னைப் போன்ற பிற உயிர்களுக்கு துன்பம் வருகின்றபோது அவற்றை நீக்கி நல்வழிப்படுத்தினர். புரவலர்களைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்று தங்களுடைய வறுமையைப் போக்கினர். புரவலன் தன்னை நாடி வருகின்ற எளியவர்களுக்கு பொன்னும் பொருளும் வழங்கியமையால் இரவலர்கள் மகிழ்ந்து இருந்தனர். அரசர்களிடம் பரிசுபெறுவதை மட்டும் குறிக்கோளாக கொள்ளாமல் அவர்களை நல்வழிப்படுத்துபவர்களாகப் புலவர்கள் இருந்துள்ளனர். புறநானூற்றுப் பாடல்களில் மனிதநேயப் பண்பு அதிகமாகக் காணப்படுகின்றது.

### துணைநூற்பட்டியல்

1. புறநானூறு மூலமும் உரையும், 2010 சாரதா பதிப்பகம், சென்னை.